2008 மே 8]

விட்டிருக்கிறார்கள். ஆகவே, தண்ணீர் வற்றவே வற்றாது. அதை எப்படி ஆழப்படுத்துவது? அங்கே இருக்கின்ற தண்ணீர் போதும் என்று கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 224, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

224—

போக்குவரத்து பகுதி அலுவலகம்

***38562—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, செய்யாறில் போக்குவரத்துத் துறையின் பகுதி அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* செய்யாறு பகுதியில், போக்குவரத்துத் துறையின் பகுதி அலுவலகம் அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அலுவலகம் அமைய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவசாயினுடைய கையிலே ஏர் இல்லையென்றால், விவசாயம் இல்லை, வயிற்றுக்குச் சோறு இல்லை. அதைப்போல, கலைஞருடைய கையிலே இன்றைக்கு நேரு இல்லையென்றால், போக்குவரத்துத் துறை உலகத் தரத்திற்கு இணையாக வளர்ந்திருக்காது என்கிற நிலை. இந்த நிலையிலே செய்யாறிலே போக்குவரத்துத் துறையின் ஒரு பகுதி அலுவலகம் அமைத்துத்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[2008 மே 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து அருகில் இருக்கின்ற R.T.O. அலுவலகத்தில் எவ்வளவு வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன, அதனால் பொதுமக்களுக்கு என்ன நன்மை என்பதை ஆராய்ந்து, வருங்காலத்தில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்ட அந்த மாவட்டத்திலே, திருவண்ணாமலையிலேயிருந்து 85 கிலோ மீட்டர் தூரத்திலும், காஞ்சிபுரத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்திலும் செய்யாறு இருக்கிறது. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தினுடைய எல்லைப் பகுதியாக இருக்கின்ற இந்தப் பகுதிக்கு, எப்படி கடந்த ஆண்டு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், வேலூர் மாவட்டத்திலே அரக்கோணத்திலே ஓர் அலுவலகத்தைத் திறந்தார்களோ, அப்படி இந்த ஆண்டு திருவண்ணாமலை மாவட்டத்திலே எல்லை வட்டாரமாக இருக்கக்கூடிய செய்யாறு பகுதியிலே ஒரு பகுதி அலுவலகத்தைத் திறக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த இரண்டு ஆண்டு காலத்தில் மட்டும் 15 புதிய R.T.O. அலுவலகங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். புதியதாக 14 யூனிட் அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. செக்-போஸ்ட் ஒன்றுக்கும் கூடுதலாக அனுமதி அளித்திருக்கிறார்கள். Zonal Office என்று DTC Office நான்கு புதிய அலுவலகங்களுக்கு இப்போது அனுமதி அளித்திருக்கிறார்கள். 10 இடங்களிலே புதிய Testing Track நல்ல ஓட்டுநர்களை

2008 மே 8]

உருவாக்குவதற்காக, அனுமதி அளித்திருக்கிறார்கள். எனவே, இந்தியாவில் இருக்கின்ற அத்தனை மாநிலங்களைக் காட்டிலும், மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக ஒரு கோடி வாகனங்களுக்குமேல் தமிழ்நாட்டில் இருக்கின்றபடியால் எந்த இடத்தில் தேவையிருக்கிறதோ அந்த இடத்தில் போக்குவரத்துத் துறையின் பகுதி அலுவலகம் தொடங்க அனுமதியை ஒவ்வோர் ஆண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, உங்களது கோரிக்கை வருங்காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். இப்போதுகூட Joint Transport அலுவலகத்தை காஞ்சிபுரத்தில் அமைப்பதற்காகக் கருத்துரு வந்திருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். எனவே, செய்யாறில் நிச்சயமாக இதுகுறித்து கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

225—

கயிறு தொழிற்சாலை

*** 34442—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, ஈத்தாமொழி பகுதியில் கயிறு தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நேரடியாக கயிறு சார்ந்த தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஸ்புரூட்டி என்று அழைக்கப்படும் பாரம்பரியத் தொழில்களைப் புத்துயிரூட்டும் திட்டத்தின்படி கயிறு குழுமம் அமைக்க மைய அரசும் மாநில அரசும் நிதி உதவி வழங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS